# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC.367/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.2 |
| Name | : | திரு.வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர், கீழ்க்கொடுங்காலூர் காவல்நிலையம். |
| Father's Name | : | த/பெ.வரதன் |
| Village | : | . |
| Taluk | : | .வந்தவாசி |
| Calling | : | . |
| Religion | : | . |
| Age | : | .53 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 15.07.2026.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317/355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் கீழ்க்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். வழக்கின் புலன் விசாரனை அதிகாரி விநாயகமூர்த்தி பணி மாறுதலில் சென்றுவிட்டாாகள். அதனால் அவா்களுக்கு நீதிமன்ற அழைப்பானைகள் சாா்பு செய்ய இயலவில்லை. நான் தொடா் பணியில் இருப்பதால் அவா்களது கையெழுத்துகள் எனக்கு தெரியும். நான் கோப்புகளின் அடிப்படை யில் சாட்சியம் அளிக்கிறேன்.

1) கடந்த 05.07.2023ம் தேதி அ.சா.1னிடம் புகார் பெற்று நிலை குற்ற எண்.178/2023 இதச பிரிவு 294(b), 323, 324, 506(2)ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. **அந்த புகார் அ.த.சா.ஆ.3 ஆகும். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆகும்.**

2) சம்பவ சாட்சிகளாக அருண்குமார், சுப்பிரமணி, கலைச்செல்வி, கருணாகரன், அனுராதா, அலமேலு ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) காசிநாதன், மதன்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அவை அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6 ஆகும்.** அதே சாட்சி முன்னிலையில் 5.7.2023ந் தேதி பகல் 12.30 மணிக்கு கடைசிக்குளம் கிராமம் சம்பவ இடம் அருகில் உள்ள மாட்டுக்கொட்டகையிடம் கொடுவா கத்தி ஒன்று கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றப்பட்டுள்ளது. **அந்த கைப்பற்றுதல் மகசர் அத.சா.ஆ.7 ஆகும். அந்த கொடுவா கத்தி சா.பொ.1 ஆகும்.**

4) காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஷீபா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவர் காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்று கருத்துரு வழங்கியுள்ளார். **அந்த விபத்து பதிவேடு அ.த.சாஆ. 8 ஆகும்.**

5) புலன் விசாரணையின்போது 4 ஆம் எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

6) வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரிகள்மீது மேற்கண்ட பிரிவுகளான 294(b), 323 , 324, 506(2)ன்கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி நான் அல்ல. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கிறேன். விசாரணை அதிகாரி வழக்கினை சரிவர புலன்விசாரண செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றவாளி இல்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை.**

இல்லை.

ARANGASAMY VAIYAPURI

Digitally signed by ARANGASAMY VAIYAPURI
Date: 2026.07.15 17:15:00 +0530